செய்தி வெளியீடு எண்: 484 நாள்:23.07.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் வணிகவரித்துறை சுற்றும்படை மூலம் மேற்கொள்ளப்படும் வாகனத்தணிக்கை, வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டுக் கடுமையாக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தமிழ்நாடு வணிகவரித்துறை ஈரோடு சுற்றும்படை அதிகாரிகள் வாகனத் தணிக்கை மேற்கொள்ளும்போது, மேற்கு வங்க மாநிலம் சாலிமர் இரயில் நிலையத்திலிருந்து கோவிட் –19 சிறப்பு சரக்கு இரயில் மூலமாக ஈரோடு இரயில் நிலையத்திற்கு 250 சிப்பம் ஆயத்த ஆடைகள், எவ்வித ஆவணங்களும் இன்றி அனுப்பப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், வணிகவரி ஆணையர், சென்னை, அவர்களது உத்தரவின்படி, ஈரோடு வணிகவரி நுண்ணறிவுக் கோட்ட இணை ஆணையர்(மாவ) நுண்ணறிவு மற்றும் சுற்றும் குழு அலுவலர்களால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 21.07.2021 (புதன்கிழமை) இரவு 10.00 மணியளவில், ஈரோடு இரயில் நிலையத்திற்கு வந்தடைந்த சரக்குப் பெட்டகத்தில் (இரயில் பெட்டி எண் 074845) வரப்பெற்ற ஆயத்த ஆடை சிப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில், சம்பந்தப்பட்ட சரக்குகள், சரக்கு மற்றும் சேவைவரிச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆவணங்களான இரசீது மற்றும் மின்னணுப் பட்டியல் ஏதுமின்றிக் கொண்டுவரப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, சரக்கு மற்றும் சேவைவரிச் சட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்களின்றிக் கொண்டுவரப்பட்ட சரக்குகள் மீது வரி மற்றும் தண்டத்தொகையாக மொத்தம் ரூ.12,50,000/– (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) வசூலிக்கப்பட்டுச் சரக்குகள் விடுவிக்கப்பட்டன.

மேலும், இது தொடர்பாக, எவ்வித ஆவணங்களின்றி இரயில் மூலம் சரக்குப் போக்குவரத்து செய்தமைக்காகத் தென்னக இரயில்வே, சேலம் கோட்டத்திற்குட்பட்ட, ஈரோடு சந்திப்பு முதன்மை பார்சல் கண்காணிப்பாளருக்கு, தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017இன் கீழ், ரூ.6,50,000/–தண்டம் விதித்தும், சரக்கு அனுப்பியவர் மற்றும் பெறுபவர்களுக்கு ஆவணங்களின்றி சரக்குப் போக்குவரத்து மேற்கொள்ள துணை போனதற்காக ரூ.50,000/– தண்டம் விதித்தும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதன்மைச் செயலர் மற்றும் வணிகவரி ஆணையர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9